சுதந்திர போராட்ட தியாகி தீரன் சின்னமலையின் நினைவு தினத்தையொட்டி சேலம் சங்ககிரியில் உள்ள கோட்டையில் தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்திற்கு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர். கே.என். நேரு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இரா.இராஜேந்திரன். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.கார்மேகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் இருந்தனர்.

பீஜிங்கில் கனமழை!

பீஜிங், ஆக.4 –

சீனாவின் பல மாகாணங்களில் டொக்சூரி புயல் தாக்கும் என அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி அங்குள்ள புஜியான் மாகாண கடற்கரை அருகே புயல் கரையை கடந்தது. அப்போது பெய்த கனமழை காரணமாக அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்தப் புயலால் 100க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. சுமார் 6,000 ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமடைந்தது. இதனால் அங்கு ரூ.493 கோடி அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கம் கணித்துள்ளது. முக்கிய ஆறுகளில் தண்ணீர் அபாய அளவை விட தாண்டி ஓடுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். கனமழையால் அங்கு இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கனமழை காரணமாக சீனாவில் இதுவரை 20க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தீரன் சின்னமலையின்

வீரத்தையும் தீரத்தையும் போற்றி வணங்குகிறேன்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 4-

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில், "தீரன் சின்னமலையின் வீரத்தையும் தீரத்தையும் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை! அவர் நெஞ்சில் சுமந்ததோ அடக்குமுறைக்கு எதிரான எரிமலை!

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகத் தமிழ் மண்ணில் விடுதலைக் கனலை மூட்டிய ஓடாநிலைக் கோட்டையின் ஓங்குயர்

தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளில் அவரின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் விளையாட்டுத் துறை மூலம் பயன்பெற்ற

தமிழ்நாடு விளையாட்டு வீரர்களின் விவரங்கள் என்ன?

மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

விளையாட்டுத் துறை தொடர்பாக திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக துணைத் தலைவருமான கனிமொழி எம்.பி. எழுத்துபூர்வமாக ஆகஸ்டு 1 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

முன்னாள் விளையாட்டு வீரர்களின் நலனுக்கான திட்டங்களின் விவரங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை, விளையாட்டு வாரியாக என்ன?

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்கான திட்டங்களின் விவரங்கள் மற்றும் அத்தகைய திட்டங்களில் பயனாளிகளின் எண்ணிக்கை என்ன? குறிப்பாக தமிழ் நாட்டில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை?

நலத் திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் பயன்

பெறும் முன்னாள் மற்றும் இளம் விளையாட்டு வீரர்களின் விவரங்கள் மாவட்ட வாரியாக என்னென்ன?"

ஆகிய கேள்விகளை எழுத்துபூர்வமாக கனிமொழி கருணாநிதி எம்பி கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அது வருமாறு:

அதில், "சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான ஸ்போர்ட்ஸ் ஃபண்ட் என்ற திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்திர வருமானம் உறுதிப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு மாதம் 12 ஆயிரம் ரூபாயில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இது தொடர்பான விவரங்கள்விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் https://yas.nic.in. இருக்கின்றன.

நாட்டில் இருக்கும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக, 'பண்டிட் தீன்தயாள் விளையாட்டு வீரர்களுக்கான தேசிய நல நிதியம்' (PDUNWFS) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஆதரவற்ற சூழ்நிலையில் வாழும் விளையாட்டு வீரர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை, விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றுக்காக நிதி உதவி செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக பயன்பெற்ற பயனாளிகளின் பட்டியல் அமைச்சகத்தின் இணையதளத்தில் https://yas.nic.in. கிடைக்கிறது

விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம், மற்றும் பண்டிட் தீன் தயாள் உபாத்யாய் தேசிய நல நிதியத் திட்டம் ஆகியவற்றில் மாவட்ட வாரியாக பயன்பெற்றோரின் விவரங்களை ஒன்றிய அரசு பராமரிக்கவில்லை"

இவ்வாறு ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் பதிலளித்தார்.

புதிய ஒழுங்குமுறை விதிகளை மேம்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4-

புதுத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய ஒழுங்குமுறை விதிகள் ஏற்படுத்துவது தொடர்பான தேவை குறித்தும், அந்த நிறுவனங்களுக்கான நிர்வாக அமைப்பை மேம்படுத்துவதற்கும், அவர்களின் வணிகத்தை எளிதாக்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என ஒன்றிய பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி வளர்ந்த பெரிய அளவிலான புதுத் தொழில் நிறுவனங்களுக்கு (StartUps) புதிய ஒழுங்குமுறை விதிகள் ஏற்படுத்துவது தொடர்பான தேவை

கள் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்கள் மற்றும் காரணங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு வகுக்கப்படும் ஒழுங்குமுறை விதி களுக்குள் உட்பட்டிருக்க வேண்டிய புதுத் தொழில் நிறுவனங் களுக்கான பொருத்தமான அளவை தீர்மானிக்கும் போது ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்படும் காரணிகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

புதுத் தொழில் நிறுவனங்களுக்கான நிர்வாக அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் அவர்கள் எளிதாக வணிகம் செய்வதை பராமரிப்பதற்கும் இடையேயான சமநிலையை ஏற்படுத்த ஒன்றிய அரசு எந்த விதத்தில் திட்டமிடுகிறது என கேள்வி எழுப்பினார்.

புதுத் தொழில் நிறுவனங்கள் தானாக முன் வந்து தங்களது வலுவான நிர்வாகத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒன்றிய அரசு ஏதேனும் விலக்குகள் அல்லது வரிச் சலுகைகளை முன்மொழிகிறதா என்றும் அவ்வாறெனில், அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

இதுபோன்ற ஒழுங்குமுறை விதிகளை மேம்படுத்த தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் புதுத் தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் போன்றவர்களிடம் ஒன்றிய அரசு எவ்வாறு இணைந்து செயல்படுகிறது என்றும் நாட்டில் உள்ள புதுத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் அதன் மீதான தாக்கம் என்ன என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும் இது தொடர்பான ஆலோசனைகளை வழங்க வல்லுநர் குழுவை ஒன்றிய அரசு நியமித்துள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

அத்தகைய குழுவானது தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நேரம் என்ன என்றும் புதுத் தொழில் நிறுவனங்கள் மூலம் வணிகத்தை மேற்கொள்பவர்களுக்கு அதனை எளிதாக்க இந்த குழு எந்த வகையில் உதவும் எனவும் கேள்வி எழுப்பினார்.

திருப்பூர் மாவட்டத்தில்

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஆக. 4 -

திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் விண்ணப்பம் பதிவு மையங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு 24.07.2023 முதல் இன்று வரை 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, காங்கேயம், தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் விண்ணப்பம் பதிவு மையங்களை 24.07.2024 முதல் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் இரண்டு கட்டமாக நடத்தப்படுகிறது. முதல்கட்டமாக நடைபெறும் முகாம்களுக்கு கடந்த 20.07.2023 முதல் 23.07.2023 வரை நான்கு நாட்கள் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் டோக்கன்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரடியாக சென்று வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (24.07.2023) அன்று தருமபுரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் விண்ணப்பம் பதிவு முகாமினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக 24.07.2023 அன்று முதல் தொடங்கி 04.08.2023 வரை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட 30 வார்டுகளிலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் 265 ஊராட்சிகளில் விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருகிறது. முதல்கட்டமாக 24.07.2023 அன்று 57,461 விண்ணப்பங்களும், 25.07.2023 அன்று 78,643 விண்ணப்பங்களும், 26.07.2023 அன்று 79,143 விண்ணப்பங்களும், 27.07.2023 அன்று 71,384 விண்ணப்பங்களும், 28.07.2023 அன்று 49,086 விண்ணப்பங்களும், 29.07.2023 அன்று 23,598 விண்ணப்பங்களும், என மொத்தம் 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் 1,135 நியாயவிலைக் கடைகளில் 8,18,344 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 827 நியாய விலை கடைகளுக்குட்பட்ட 5,34,460 குடும்ப அட்டைதாரர்களுக்கான விண்ணப்பப் பதிவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக, 308 நியாய விலை கடைகளுக்குட்பட்ட 2,83,884 குடும்ப அட்டைதாரர்களுக்கான விண்ணப்பப் பதிவு செய்யும் பணிகள் 05.08.2023 முதல் 16.08.2023 வரை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட 30 வார்டுகளிலும், 6 நகராட்சி பகுதிகளிலுள்ள 147 வார்டுகளிலும் மற்றும் 15 பேரூராட்சிகளுக்குட்பட்ட 233 வார்டுகளிலும் இரண்டாம் கட்டமாக விண்ணப்ப பதிவு முகாம்கள் நடைபெறும். இந்த விண்ணப்பப் பதிவு முகாம்கள் பொது மக்களின் வசதிக்கேற்ப அந்தந்த பகுதியில் உள்ள நியாய விலைக்கடை அருகில் உள்ள அரசு அலுவலக கட்டடங்கள், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் பள்ளிகளில் விண்ணப்ப பதிவு முகாம்கள் நடைபெறும். இதற்காக விண்ணப்பப் பதிவு முகாம்களில் இல்லம் தேடிக்கல்வி தன்னார்வலர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கீழையூர் ஊராட்சி அரசுப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள அரங்க மேடையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்த ரூ 75 லட்சம் நிதி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்!

சென்னை, ஆக.4-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (CSR Fund) கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் எழுபத்தைந்து லட்சம் நிதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா நேற்று (02-08-2023) வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரிய முயற்சியின் காரணமாக தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்திய அளவில் மட்டுமல்லாமல் உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு மிகவும் ஈர்த்துள்ளது.

இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகளின் பயன்பாட்டிற்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காவும், ஊரகப்பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காகவும், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் போட்டிகள் பங்கேற்பாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காகவும். தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (CSR Fund) கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் எழுபத்தைந்து லட்சம் ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு" இன்று (02-08-2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் முனைவர் மு.சாய் குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் - சீர்காழி - திருமுல்லைவாசலில்

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் - எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை. ஆக.4-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமைத் தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு பள்ளி, மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 2022-2023ஆம் கல்வியாண்டில் 52 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் முதலாம் ஆண்டு படிக்கும் 2641 மாணவர்களுக்கும், 3895 மாணவிகள் என 6536 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3.14 கோடி மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கப்பட்ட உள்ளது.

சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள 16 பள்ளிகளை சேர்ந்த 1771 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 85.35 லட்சம் மதிபில் மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழிக்குட்பட்ட பகுதிகளில் பயிர்காப்பீட்டு திட்டத்தின் கீழ் 94 கோடி பயிர் இழப்பீடு தொகையினையும், தமிழ்நாடு அரசு பெற்று தந்துள்ளது. சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் சட்ட மன்றத்தில் மயிலாடுதுறைக்கு அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சட்ட மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கையும் எடுக்கும். மேலும் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் திருமுல்லைவாசல் பகுதியில் உள்ள சிறு துறைமுகம் வேண்டும் என்ற கோரிக்கையும் சட்ட மன்றத்தில் வைத்துள்ளார். இந்த கோரிக்கையையும் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித்துறையின் மீது தனி கவனம் செலுத்தி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். குறிப்பாக நிதி ஒதுக்கீட்டில் கல்வி துறைக்கு ரூ.40 ஆயிரத்து 299 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாணவ, மாணவியர்கள் தங்களது கல்வித் திறனை வளர்ப்பதற்கு தேவையான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கல்வி என்பது ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் முக்கியமானது என்பதை கருத்தில் கொண்டு மாணவர்கள் நல்ல முறையில் கல்வி பயின்று வாழ்க்கையில் உயர வேண்டும் இவ்வாறு அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.